1974 மார்ச் 22]

கோயில்பட்டியில் தீயணைப்பு நிலையம்

*552 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயில்பட்டியில் தீயணைக்கும் படை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 18—1—1974 முதற்கொண்டு கோயில்பட்டியில் தீயணைப்பு நிலையம் ஒன்று இயங்கி வருகிறது.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, புதிதாக கோயில்பட்டியிலே தீயணைப்பு நிலையம் ஆரம்பித்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நெல்லையிலே இதைச் சேர்த்து 3 தீயணைப்பு நிலையங்கள்தான் இருக்கின்றன. ஆகவே, முக்கியமான தாலுகா தலைநகரங்களில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கனவே முன்னுரிமை வரிசைப் பட்டியலில்—தீயணைப்பு நிலையங்கள் அமைப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருக்கிற அந்த வரிசைப் பட்டியலில்—கடையநல்லூர், புளியாங்குடி, சங்கரன்கோவில், செங்கோட்டை, அம்பாசமுத்திரம், திருச்செந்தூர், மேலப்பாளையம், நாங்குநேரி—ஆகிய 8 இடங்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவைகளை வரிசைப்படி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோயில்பட்டியில் தீணைக்கும் படைபற்றிய கேள்வி இது. மற்றைய இடங்களைப் பற்றி நாளை, மானியக் கோரிக்கையில் பேசிக்கொள்ளலாம்.

Central Schools

*553 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) the total number of Central Schools functioning in this State as on the 30th April, 1973; and

(b) the details thereof district-wise?